# Republic Day Celebrations Press Clippings

## Maalai News

## 27.01.2021

# மாற்று திறனாளிகளுக்கான தேசிய நிறுவனத்தில்

# 72 வது குடியரசு தின விழா கொண்டாட்டம்



சென்னை, ஜன.28–

சென்னையில் உள்ள முட்டுக்காட்டில் இயங்கி வரும் ஒன்றுக்கும்மேற்பட்ட ஊனமுற்றோரின்மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தில் 72 வது குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. நசிகேதா ரௌட், இயக்குனர் அவர்கள் மூவர்ண தேசிய கொடியை ஏற்றி வைத்து குடியரசு தின சிறப்புரை ஆற்றினார். அவர் ஆற்றிய உரையில் இந்திய அரசியலமைப்பின் முக்கியத்துவத்தையும், மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு துறையில் அதன் செல்வாக்கையும், இந்திய அரசியலமைப்பை சட்டத்தை உருவாக்கியதில் முக்கிய பங்காற்றிய தலைவர்களின் பங்களிப்பு, மற்றும் அதன் புனைவுகளை நினைவு கூர்ந்தார். மேலும் நவீன இந்தியாவை கட்டியெழுப்புவதில் அவர்கள் செய்த பங்களிப்பைப் பாராட்டினார்.

குடியரசு தின விழாவை சிறப்பிக்கும் விதமாக இந்நிறுவனம் பல கலைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தது. அதன் ஒரு பகுதியாக இந்நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுக்கான சட்டத்தின் பரிணாம வளர்ச்சி நிலைகளை பேரணி மூலம் சித்தரித்தனர்.

மேலும் இவ்விழாவில் இந்நிறுவனத்தில் பணிபுரியும் சமூக பொறுப்புணர்வு திட்ட ஆலோசகர் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞருமான அபிநயா எழுதிய "உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்: ஊனமுற்ற நபர்களை மேம்படுத்துவதற்கான சட்ட வழிகாட்டி" என்ற நூலை இயக்குனர் நசிகேதா ரௌட், வெளியிட்டார். மேலும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாணவர்கள் பங்குபெற்ற கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் .சங்கர நாராயணன் துணைப்பதிவாளர், முனைவர் அமர்நாத் சமூகபணி துறைத்தலைவர் பூமிமிணிறிவிஜி அலுவலர்கள், பெற்றோர்கள், மாற்றுத்திறனாளிகள், மற்றும் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

**Maalai Murasu**

**27.01.2021**



மாற்றுதிறனாளிகளுக்கான உரிமைகளையும், உரிமைகள் தர மறுக்கப்பட்டால் அவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளையும், வெவ்வேறு நீதிமன்றகளில் அவ்வுரிமைகளுக்காக நடந்த வழக்குகளில் வழங்கப்பட்ட சாதகமான தீர்ப்புகள் அடங்கிய புத்தகத்தை சமூக பொறுப்புணர்வு திட்ட ஆலோசகர் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞருமான, எஸ்.எம்.அபிநயா எழுதினார். அந்த புத்தகத்தை, சென்னையில் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டு மையத்தில், என்.ஐ.இ.பி. எம்டி.இயக்குனர் நசிகேதா ரௌட் வெளியிட்டபோது எடுத்தபடம். அருகில், வழக்கறிஞர் அபிநயா,எஸ்.சங்கரநாராயணன், அமர்நாத் ஆகியோர் உள்ளனர்.

**Ullatchi Murasu**

**28.01.2021**

மாற்று திறனாளிகளுக்கான தேசிய நிறுவனத்தில்

# 72வது குடியரசு தின விழா கொண்டாட்டம்





சென்னை, ஜன.28-

சென்னையில் உள்ள முட்டுக்காட்டில் இயங்கி வரும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனத்தில் 72வது குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நசிகேதா ரௌட், இயக்குனர் மூவர்ண தேசிய கொடியை ஏற்றி வைத்து குடியரசு தின சிறப்புரை ஆற்றினார். அவர் ஆற்றிய உரையில் இந்திய அரசியலமைப்பின் முக்கியத்துவத்தையும், மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு துறையில் அதன் செல்வாக்கையும், இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கியதில் முக்கிய பங்காற்றிய தலைவர்களின் பங்களிப்பு, மற்றும் அதன் புனைவுகளை நினைவு கூர்ந்தார். மேலும் நவீன இந்தியாவை கட்டியெழுப் புவதில் அவர்கள் செய்த பங்களிப்பை பாராட்டினார்.

குடியரசு தின விழாவை சிறப்பிக்கும் விதமாக நடந்த பல கலை நிகழ்ச்சிகளில் ஒரு பகுதியாக மாணவர்கள் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வுக்கான சட்டத்தின் பரிணாம வளர்ச்சி நிலைகளை பேரணி மூலம் சித்தரித்தனர்.

மேலும் இவ்விழாவில் இந்நிறுவனத்தில் பணிபுரியும் சமூக பொறுப்புணர்வு திட்ட ஆலோசகர் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞருமான S.M. அபிநயா எழுதிய "உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்': ஊனமுற்ற நபர்களை மேம்படுத்துவதற்கான சட்ட வழிகாட்டி" என்ற நூலை NIEPMD இயக்குனர் நசிகேதா ரௌட், வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் S. சங்கர நாராயணன், துணைப்பதிவாளர், முனைவர். அமர்நாத், சமூக பணி துறைத்தலைவர், NIEPMD அலுவலர்கள், பெற்றோர்கள், மாற்றுத் திறனாளிகள், மற்றும் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.